**CC. 47/2010 Dt: 13.08.2024** **விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 02.30**

**அ.சா. 4, கணேசன், த.பெ. ராமநாதன் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 1, 2 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் எத்தனை ஆண்டுகளாக வழக்கறிஞர் தொழில் செய்கிறேன் என்றால் 55 ஆண்டுகள். எதிரிகள் தரப்பில் தஞ்சாவூர் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளான OS. 67/2006, OS. 40/2005 மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS.153/2005 ஆகிய வழக்குகளில் நான் எதிரிகள் தரப்பில் ஆஜர் ஆனேனா என்றால் சரிதான். முதலில் நான் ஆஜர் ஆனேன். பின்பு வேறு வழக்கறிஞருக்கு மாறிவிட்டனர். இந்த வழக்குகள் தரப்பினர்களுக்கிடையே சமாதானம் ஆகிவிட்டார்களா என்றால் எனக்கு தெரியாது. வழக்கின் இறுதி நிலையில் நான் ஆஜராகவில்லை. OS. 153/2005 வழக்கில் மேல்முறையீட்டு வழக்கில் தஞ்சாவூர் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் AS. 50/2008 வழக்கில் பேங்க் ஆப் இந்தியா சார்பான நான் ஆஜர் ஆனேன்.

2. AS. 50/2008 வழக்கில் ராமலிங்கத்திற்கு எதிராக நடராஜன் என்பவர் தரப்பினராக இருந்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி தரப்பினர்களுக்கிடையே AS. 50/2008 வழக்கு சமரசம் ஆகிவிட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.சா. ஆ. 17ல் தான் 17.12.2004ம் தேதியிட்ட உயில் ஆவணம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா. ஆ. 17ல் காணும் போது உயில் ஆவணத்தை தவிர வேறு சில சொத்து விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கருத்துரையில் 3வது இன சொத்தாக உயில் சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கருத்துரையில் கோவிந்தசாமி பிள்ளைக்கு பாக பத்திரம் மூலமாக கிடைத்த சொத்து தான் உயில் எழுதி வைக்கப்பட்டது என்றால் சரிதான்.

3. அந்த உயில் 20.01.1963ம் தேதி பக்கிரிசாமி மகன் மூகாம்பரத்திற்கு எழுதி வைக்கப்பட்டது என்றால் சரிதான். எனது கருத்துரையின் படி 20.01.1963 ம் தேதி

உயில் ஆவணம் சரியானது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான் பார்வையிட்ட ஆவணங்களின் அடிப்படையில் சரியானது என கருத்துரை வழங்கியுள்ளேன். நான் ஆவணங்களை சரி பார்த்து சட்ட கருத்துரை வழங்கியுள்ளதால் 20.01.1963ம் தேதி உயில் மோசடியானது அல்ல என்றால் சரிதான்.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

(**ஒப்பம்/-திருமதி.எஸ்.சுசிலா**),
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.